DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

O.S. No.77 of 2012

Plaintiff Witness : PW - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி. தீபா | Caste | : | |
| Husband Name | : | ரஞ்சித்குமார் | Calling | : | |
| Village | : | செம்புளிவரம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 43 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.12.2024

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு. நாகராஜ் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் செவ்வாய்க்கிழமை 03ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

இரண்டாம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை நேரம் 11.50

1. வழக்கு சொத்தினை இரண்டாம் பிரதிவாதி தந்தையான பலராமன் என்பவருக்கு இரண்டு எருமை மாடுகள், 10 ஆடுகள், ரூபாய் 200 ரொக்கம் கொடுத்து அந்த இடத்தினை வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

2. இரண்டாம் பிரதிவாதி தந்தையான பலராமன் என்பவரோ, எனது தந்தை வழி நாகம்மாள் என்பவரோ உயிருரோடு இருக்கும் வரை வழக்கு சொத்திற்கு பிரச்சனை எழவில்லை என்றால் இல்லை எனது பாட்டியார் கேட்டுக்கொண்டு தான் இருந்தார்.

3. வழக்கு சொத்தில் அவ்வாறு காலி செய்ய வேண்டும் என்று சொன்னதற்கு எதெனும் ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் சரியாக தெரியவில்லை.

4. அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருந்தால் உங்களுக்கு தெரிந்து இருக்கும் வேண்டுமென்றே பொய் சொல்கின்றீர்கள் என்றால் நான் பொய் சொல்லவில்லை.

5. தாவா சொத்தில் இருந்து காலி செய்ய சொல்லி எனது பாட்டி உயிருடன் இருந்தபோது, சொல்லவில்லை என்றால் பாட்டி உயிருடன் இருந்தபோது சொல்லியுள்ளார்.

6. பிரதிவாதிகள் எங்களுக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7. இந்த வழக்கு சொத்திற்கான பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால்

என்னுடைய பெயரில் தான் உள்ளது.

8. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் பத்தி 7ல் கொண்டசாமிநாயுடு என்பவருக்கு 37 சென்ட் நிலம் உரிமை உள்ளது என்று சொன்னது பொய் என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை.

9. பிரதிவாதிகள் அமைதியான முறையில் உரிய மறுபயன் கொடுத்து வாங்கி அனுபவம் செய்து வருகின்றார்கள் நாங்கள் தான் இடையூறு ஏற்படுத்துக்கின்றோம் என்றால் இல்லை.

10. பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எப்போது அனுப்பினீர்கள் என்றால் அவர்கள் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு அனுப்பினோம்.

11. பிரதிவாதிகள் எங்களுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

12. புகார் கொடுத்த விவரம் தெரிந்தும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

13. வழக்கு சொத்தில் கலைஞர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் இரண்டாம் பிரதிவாதியான கண்ணையா என்பவர் பெயருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்று சரிவர பார்க்காமல் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

14. அரசாங்கத்தால் உரிய விசாரணை நடைபெற்று அதன் பின்னிட்டு தான் வீடு கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15. வழக்கு சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதாற்காக வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கும்போதே வங்கிகளில் அடைமானம் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

16. அடைமானம் எதுவும் இல்லை என்பதை நிரூபணம் செய்ய வில்லங்கசான்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் வழக்கு சொத்தினை அடைமானம் செய்துள்ளோம்.

17. வழக்கு சொத்தில் B அட்டவனை சொத்து பிரதிவாதிகளுக்கு தான் சொந்தமானது என்பதால் அதில் நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

18. இந்த வழக்கு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், உரிய காலத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 12.15